# ஆயில்யம் நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



## 1. கணபதி வழிபாடு

பரசிவம், சின்மயம், பூரணம்,
சிவபோகபாக்யம் பரமநிதியம்

## 2. திருவருட்பாவில் சிவ ஆயில்யம் சக்தி

பரலோக ஆதிக்கம் நித்தியசாம்பிராச்சியம்,
பரபதம், பரம சூட்சுமம்

## 3. திருப்பாவைபாசுரம் – 27 ஆயில்யம் இயல்பு

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா உன்தன்னை
பாடிப் பறைகொண்டு யாம்பெறும் சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/r7Y59827Hig**

## விளக்கம் :

கூடியிருக்கச் செய்வது கோடி, கோடி புண்ணியமாகும். இந்த நித்திய சாம்ராஜ்யத்தை நடத்த யாரால் முடியும். ஆயில்யத்தின் அயராத உழைப்பே, தளராத படிப்பே, பிறழாத சூட்சமமே, பரலோக ஆதிக்கமே, பரமபதமே, என்றெல்லாம் சொன்னால் மட்டும் போதாது. உன்னை பாடி, பாராட்டி பரிசளிக்க வேண்டும். நாடு புகழும் பரிசுகளான, சூடகமே, தோள்வளையே, தோடே, செவிப்பூவே என்றெல்லாம் பரிசுகள் அளிக்கப்பட வேண்டும்.

மணவிழாவில் மாப்பிள்ளை அழகு, மாலைகள் மாப்பிள்ளைக்கே சொந்தம், மாப்பிள்ளை நாயகன் இந்த சுபாவத்தில் தான் ஆயில்யத்தின் ஆதிக்கம், அனைத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கும்.

பாராட்டுகளும், பொன்னாடைகளும், அதன் பின்னே பால் சோறும், நெய் சோறும், சர்க்கரை பொங்கலும் ஊக்கத்திற்கு அளிக்கப்படும்.

கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா என பாடி, பாடி பறை கொண்டு எல்லோர்க்கும் அருள் கிடைக்க வழிவகை செய்பவர்களே ஆயில்யமாகும். ஆனாலும் சன்மானம் உள்ளம் குளிர உனக்கேயாம் அளிக்க வேண்டும்.

இந்த பரம ரகசியத்தை, அணுகுமுறையை, வெளிப்பாட்டை, வெற்றியை வேறு எவரும் செய்ய இயலாது. எனவே கூடியிருந்து குளிர்வது என்பது உலகியலில் ஒரு எல்லைக் கோடாகும். கூடி மகிழாது ஒதுங்கி இருப்பவர் களையும் அன்பால் வென்று அடிமைப்படுத்தும் குணக்குன்றே ஆயில்யமாகும்.

இந்த நாடு புகழும் பரிசினால் நன்றாக சூடகமே, தோள்வளையே, தோடே, செவிப்பூவே பாடகமேயென்றனைய பல்கலனும் யாமணிவோம். இந்த நித்திய சாம்பிராச்சியத்தை ஆயில்யம் மட்டுமே சாதிக்க முடியும்.

இந்த அன்பு ஆதிக்கத்தில் ஆயிரமாயிரம் பேர் உழைத்திருந்தாலும் அந்த உழைப்பை திரண்ட வெண்ணையாக உருவாக்கும் பரம சூட்சுமம் உங்களுக்கு மட்டுமே தெரியும்.

கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா ஆயில்யம் நீ சொல்லும் வார்த்தைகளே, நீ காட்டும் பாதைகளே பரமபதமாக அமைந்து ஆயில்யத்திற்கு

புகழ் சேர்க்கும். பாடிப்பறை கொண்டு நீ பெறும் சன்மானம் நாடு புகழும். நாடு உன்னையே புகழும் உன் உழைப்பை போற்றும். புத்தாடையும், பால் சோறும், நெய்யோடு கிடைக்க வழிவகை செய்யும். ஒதுக்கிய அலங்காரங்கள் அத்தனையும் உனது உழைப்பால் அனைவருக்கும் கிடைக்கும். எனவே ஆயில்யம் சொந்த வேலையை விட வந்த வேலைக்கு மதிப்பளித்து சமுதாய தலைவர் ஆவார்கள். ஆயில்யமே வருக! ஆயில்யமே அருள்க!

## 4. வேதத்தில் ஆயில்யம் ஜோதிசக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

சர்பராஜாய வித்மஹே
மஹாரோசனாய தீமஹி
மதுமஜ் ஹோமி தீமஹி
தன்னாஸ்லேஷா ப்ரசோதயாத்

ஆதிக்கம் செய்திடும் அருமருந்தே
அழைத்தால் வந்திடும் ரகசியமே
நித்தியமான ராஜ்ஜியமே
நினைந்தால் துணைவா நமோ நமோ

தேடியே உதவி செய்து வரும்
கூடியிருந்து குளிர வைக்கும்
சூட்சுமங்கள் தனைக் கொண்ட
சுந்தர நிலையே நமோ நமோ

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

**5. ஆயில்யம் கவிதை**

ஆளப்பிறந்தவரே; ஆதிக்க நாயகரே
இசுபர சாம்ராஜ்யமே; இதமான பதமே
வெற்றியின் இரகசியமே; வேத சூட்சமமே
நிரந்தர சந்தேகமே நீரே தீர்மானமே

நாடகமேடை, ஊடக ஓடை, பரலோகாடை
எங்காயினும், எப்படியாயினும், எதுவாயினும்
வரவாயினும், செலவாயினும், தர்மமாயினும்
நியாயமாயினும், சத்தியமாயினும் சூட்சமம் நீயே

நின் தந்திரங்களும், தயவும் கூட மந்திரமாகும்
நின் மந்திரங்களும், மாயமும் கூட தந்திரமாகும்
நின் லட்சணங்களும், லட்சுமியும் கூட லட்சியமாகும்
நின் ஹிம்சைகளும், இதயமும் கூட யதார்த்தமாகும்

ஆசையில்லை எனில் புத்தனின் சூட்சுமம்
ஆசை உண்டு எனவே சித்தன் நின் சூட்சுமம்
ஆசைப்படுவதே, அதற்கென மலர்வதே – நீவிர்
ஆசை அத்தனையும் பரலோகம் செல்ல உரிமமே – நீவிர்

இகபர சுகமாக, சுகமான போதாந்தங்களே
இகமாயின் இதயசுத்தியுடன் விலாசபிரகாசமே
பரமாயினும் ஆதிக்க வனப்புடன் உடன் வருவிப்பாயே
சுயநலங்கள் பரநலங்களாய் பொது நடம் புரியுமே

உன்னை பாராட்டாமலிருந்தால் உலைச்சலடைவாய்
உன்னை தாலாட்டாமலிருந்தால் உலுக்கிவிடுவாய்
உன்னை ஓரங்காட்டினால் ஓரங்களில்லாமல் கிழியும்
உன்னை உபசரித்தால் உலகம் உடனடியாக உய்யும்!

## 6. அபிராமி அந்தாதியில் ஆயில்யம் சக்தி

**இறக்கும் நிலையிலும் அம்பிகை நினைவோடு இருக்க**

இழைக்கும் வினைவழியே ஆடும் காலன் எனைநடுங்க

அழைக்கும் பொழுதுவந்து அஞ்சல் என்பாய்; அத்தர் சித்தமெல்லாம்

குழைக்கும் களபக் குவிமுலை யாமலைக் கோமளையே!

உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே.

**சிறந்த நன்செய் நிலங்கள் கிடைக்க**

வந்தே சரணம் புகும் அடியாருக்கு வான்உலகம்

தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்

பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும் பொன்

செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே.

**திருமணம் நிறைவேற**

திங்கள் பசுவின் மணம் நாறும் சீறடி சென்னிவைக்க

எங்கட்கு ஒருதவம் எய்தியவா! எண்ணிறந்த விண்ணோர்

தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ? தரங்கக் கடலுள்

வெங்கண் பணியணைமேல் துயில்கூரும் விழுப்பொருளே.

**பழைய வினைகள் வலிமை பெற**

பொருளே! பொருள் முடிக்கும் போகமே! அரும்போகம் செய்யும்

மருளே! மருளில் வரும் தெருளே என் மனத்து வஞ்சத்து

இருளேதும் இன்றி ஒளிவெளியாகி இருக்கும் உன்தன்

அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே!

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் ஆயில்யம் சக்தி ஓம்... ஓம்... ஓம்...

ஓம் யுகாதிக்ருதே நம – காலத்தின் காரணியே போற்றி

ஓம் யுகாவர்த்தாய நம – சத்யுகங்களின் சர்வ காரணமே போற்றி

ஓம் நைகமாயாய நம – மாயைகளின் அரும் பணியே போற்றி

ஓம் மஹாஸநாய நம – கல்பத்தின் ஜீரணமே போற்றி

ஓம் அத்ருஸ்யாய நம – ஐம்புலனுக்கும் அகப்படாத சூக்ஷமமே போற்றி

ஓம் வ்யக்தரூபாய நம – சர்வ வியாபியே போற்றி

ஓம் ஸஹஸ்ரஜிதே நம – ஆயிரம் நாயகரை வென்றவனே போற்றி

ஓம் அநந்தஜிதே நம – தோல்வியறியாத நித்ய வெற்றி சூரனே போற்றி

ஓம் இஷ்டாய நம – பேரானந்தம் நல்கும் பேரொளியே போற்றி

ஓம் அவிஸிஷ்டாய நம – எல்லா உள்ளங்களில் வாழும் தீர்வே போற்றி

ஓம் ஸிஷ்டேஷ்டாய நம – எல்லா நிலையறிந்த சொந்த மகிழ்ச்சியே போற்றி

ஓம் ஸிகண்டிநே நம – கண்ணன் சிகையிலிருந்த மயிலிறகே போற்றி

ஓம் நஹு^ஷாய நம – பந்தபாசம் இணைக்கும் பன்முக மாயையே போற்றி

ஓம் வ்ருஷாய நம – தர்மத்தின் அரங்கேற்றமே போற்றி

ஓம் க்ரோதாக்நே நம – குணவான்களின் கோபங்கள் குறைப்பவனே போற்றி

ஓம் க்ரோதக்ருத்கர்த்ரே நம – குணமில்லார்க்கு கோபக்கலை மூட்டுபவனே போற்றி

ஓம் விஸ்வபாஹுவே நம – உலகியலில் உளமார்ந்த பொறுப்பேற்பவனே போற்றி

ஓம் மஹீதராய நம – ஆகமங்களை செயல்படுத்தி ஆசைகளை அருள்பவனே போற்றி

ஓம் அச்யுதாய நம – ஆறு எதிரிகள் தீண்டாத அச்சுதனே போற்றி

ஓம் ப்ரதிதாய நம – பரபதமாய் விளங்கி இக சுகமளிப்பவனே போற்றி

ஓம் ப்ராணாய நம – பிராண நாதனாய் பிரசவிக்கும் உட்காற்றே போற்றி

ஓம் ப்ராணதாய நம – பிராணனை எடுக்கும் அசுரனின் எதிரியே போற்றி

ஓம் வாஸவாநுஜாய நம – இந்திரனின் இளவல் வாசவனே போற்றி

ஓம் அபாம்நிதயே நம – திருப்பாற் கடலில் ஆதிகேசவனே போற்றி

ஓம் அதிஷ்டாநாய நம — விஷ்ணுவை தாங்கும் சுக தாங்கியே போற்றி

ஓம் அப்ரமத்தாய நம — கர்ம வினையை கனியாகத்தருபவனே போற்றி

ஓம் ப்ரதிஷ்டிதாய நம — பரிசும், பாராட்டிற்கும் உரிய பங்காளனே போற்றி

ஓம் ஸ்கந்ததராய நம — அனைத்தையும் கட்டி, அணைத்து மேல் எழும் அக்னியே போற்றி

ஓம் துர்யாய நம — நல் உணர்வு நாயகனே போற்றி

ஓம் வரதாய நம — சுமைதாங்கி சுகமளிக்கும் சுவர்க்க வழி நிர்வாகமே போற்றி

ஓம் வாயுவாஹநாய நம — வரமளிக்கும் வாசனே போற்றி

ஓம் வாஸ⁶தேவாய நம — ஆதிக்க அருள்தேவனே போற்றி

ஓம் ப்ருஹத்பாநவே நம — தேவர்களின் புனித தேவனே போற்றி

ஓம் ஆதிதேவாய நம — தேவர்களின் இடர்களைந்து சுகம் தருபவனே போற்றி

ஓம் புரந்தராய நம — பழைமை பாரம்பரியமே போற்றி

## 8.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் ஆயில்யம் சக்தி

நிர்விகல்பா நிராபாதா நிர்பேதாபேதநாசினீ
நிர்நாசாம்ருத்யுமதனீ நிஷ்க்ரியா நிஷ்பரிக்ரஹா

நிஸ்துலா நீலசிகுரா நிரபாயா நிரத்யயா
துர்லபாதுர்க்கமாதுர்காதுக்கஹ்ந்த்ரீ ஸு⁶கப்ரதா

துஷ்டதூராதராசார சமனீ தோஷ வர்ஜிதா
ஸர்வஜ்ஞா ஸாந்த்ரகருணா ஸமாநாதிகவர்ஜிதா

ஸ்வசக்திமயீ ஸர்வமங்கலா ஸத்கதி ப்ரதா
ஸர்வேச்வரீ ஸர்வமயீ ஸர்வமந்த்ர ஸ்வரூபிணீ

ஸர்வயந்த்ராத்மிகா ஸர்வதந்த்ரரூபாமனோன்மனீ
மாஹேச்வரீ மஹாதேவி மஹாலக்ஷ்மீர்ம்ருடப்ரியா

மஹாரூபாமஹாபூஜ்யாமஹாபாதகநாசினீ
மஹாமாயாமஹாஸத்வாமஹாசக்திர்மஹாரதி

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் ஆயில்யம் சக்தி

நின்னையே நான் வேண்டி நித்தமும் ஏத்துகிறேன்

மெய்யறிவாக ஸ்கந்தா வந்திடுவாய் இவனுளே நீ

வந்திடுவாய் மருவிடுவாய்ப் பகுத்தறிவாகவே நீ

பகுத்தறி வோடிவனைப் பார்த்திடச் செய்திடப்பா

பகுத்தறிவான கந்தன் பரங்குன்றில் இருக்கின்றாய்

பழனியில் நீயும் பழம்ஜோதி ஆனாய் நீ

பிரம்மனுக்கு அருளியவா ப்ரணவப் பொருளோனே

பிறவா வரமருளிப் ப்ரம்ம மயமாக்கிடுவாய்

திருச்செந்தூரில் நீ சக்திவேல் தாங்கி விட்டாய்

பழமுதிர் சோலையிலே பரஞ்சோதி மயமானாய்

ஸ்வாமி மலையிலே சிவஸ்வாமிக் கருளிய நீ

குன்றுகள் தோறும் குருவாய் அமர்ந்திட்டோய்

ஸ்கந்தகிரியை நீ சொந்தமாக்கிக் கொண்டனையே

ஸ்கந்த குருநாதா ஸ்கந்தாச்ரம ஜோதியே

பிறப்பையும் இறப்பையும் பெயர்த்துக் காத்திடுவாய்

பிறவாமை என்கின்ற பெருவரம் நீ தந்திடுவாய்

தத்துவக் குப்பையை மறந்திடச் செய்திடுவாய்

எந்த நினைப்பையும் எரித்து நீ காத்திடுவாய்

ஸ்கந்தா சரணம் ஸ்கந்தா சரணம்

சரணம் அடைந்திட்டேன் சடுதியில் வாருமே

சரவண பவனே சரவண பவனே

உன்னருளாலே நான் உயிரோடிருக்கின்றேன்

உயிருக்குயிரான ஸ்கந்தா உன்னிலென்னைக் கரைத்திடப்பா

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

## 10. கந்தர் அநுபூதி ஆயில்யம் சக்தி

யாம் ஓதிய கல்வியும், எம் அறிவும்

தாமே பெற, வேலவர் தந்ததனால்

பூ மேல் மயல் போய் அறம் மெய்ப் புணர்வீர்

நாமேல் நடவீர், நடவீர் இனியே.(17)

உதியா, மரியா, உணரா, மறவா,

விதி மால் அறியா விமலன் புதல்வா,

அதிகா, அநகா, அபயா, அமரா

பதி காவல, சூர பயங் கரனே.(18)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

## 11. ராகங்களில் ஆயில்யம் சக்தி

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| ஹரஹர பிரியா | கௌரிமனோகரி | வருண பிரியா | வருண பிரியா |

## 12. மூலமந்திரம்

ஏஹி ஸர்ப்பமஹாபாக பிம்மேஸ்மின்

ஸன்னிதம் குருபூஜார்த்தம் தவாமஹம்

பக்த்யாப்ரார்த்தயாமி ஸமாஹித

## 13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| புன்னை | முக்கொட்டை | இலந்தை | பலா |

## 14. பரிகாரம்

- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு கற்கடேஸ்வரர் திருக்கோயில்,** கோமல் - நாகப்பட்டினம்.


Aathma Trust **(ஆத்ம லிங்கம்)**

Regd No: 96/19

33.கோசாலை, கிரிவலம்,

திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org

www.yaasha.in

**Email :** jhohumm@gmail.com

**Youtube :** aathmanakshatra